Judicial Form No.53
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, POCHAMPALLI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : OS.No.57/2019 | | |
| Witness for Prosecution | : PW1 | | |
| Name | : சங்கர் | Taluk | : |
| Father's / Husband Name | : கே. மாணிக்கம் | Calling | : விவசாயம் |
| Village | : கோடிபுதூர் | Age | : 63 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 22.06.2026 administered by **MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, POCHAMPALLI.**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

என்னுடைய தகப்பனார் முதலில் கர்ணம் ( கிராம முன்சீப்) ஆக இருந்தார் என்றால் சரியல்ல, என்னுடைய அப்பா கிராம நிர்வாக அலுவலராக இருந்தார். பொதுவாக ஒரு நிலத்தை எவ்வளவு பட்டா பெறவேண்டும் என்ற விவரம் என்னுடைய அப்பாவுக்கு தெரியும் என்றால் அது எனக்கு தெரியாது என்னுடைய அப்பாவுக்கு தான் தெரியும். என்னுடைய தாவாவில் தாவா சொத்து ஆதியில் என்னுடைய தந்தை லேட் கே. மாணிக்கம் என்பவருக்கு பட்டா படியும் கிரையப்படியும் பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளபோது அவரது பெயரில் ஏற்பட்ட தனி பட்டாவினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதேபோல் என்னுடைய தகப்பனாரின் பெயரில் உள்ள தாவா சொத்திற்கான கிரைய பத்திரங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

அதேபோல் என்னுடைய தகப்பானரின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்துள்ளதாக சொல்லியுள்ளபோது அதற்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னுடைய தகப்பனாரின் பெயரில் உள்ள சிட்டாவினை தாக்கல் செய்துள்ளேன். அதேபோல் என் தகப்பனாரின் பெயரில் உள்ள அடங்கல் பதிவேடோ அல்லது கந்தாய ரசீதோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் தாவாவில் சொல்லியுள்ள

நிலத்தையும் சேர்த்து மற்ற நிலங்களும் சேர்த்து 1 ஆம் பிரதிவாதியின் மூதாதையருக்கு பாத்தியப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் சொல்வது தவறு என்றாலும் வழக்கிற்காக தற்போது தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

எனது தகப்பனார் கிரையப்படி தாவா சொத்தை பெற்றதாக சொல்லியுள்ளபோது யாரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது, என் தகப்பனாருக்கு தான் தெரியும். 1 ஆம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் நடராஜ் என்றாலும் அவருடைய தாத்தா பெயர் மாரப்பன் என்றாலும் அது குறித்து எனக்கு தெரியாது, மணிமாறனின் அப்பா பெயர் மட்டும் தெரியும். 1 ஆம் பிரதிவாதி மணிமாறன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய தகப்பனார் தாவா சொத்தை பொறுத்து எனக்கு உயில் எழுதியதாக சொல்லியுள்ளபோது அதனை சட்டப்படி நிலைநிறுத்த நடவடிக்கை ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல, சட்டப்படி நடவடிக்கை எடுத்துள்ளேன்.

தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னுடைய தாவாவில் பூஸ்திதி கிராமம் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளபோது அதற்கு என்ன அர்த்தம் என்றால் அது அனைவரும் குடியிருக்கக்கூடிய கிராம பகுதியாகும். என்னுடைய தாவாவில் பூஸ்திதி கிராமம் என்று குறிப்பிட்டு இருக்கும் பட்சத்தில் அந்த நிலத்தின் உண்மையான உரிமையாளர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது தவறு என்றாலும், எனக்கு உண்மையான உரிமையாளர் பற்றிய விவரம் தெரியும் என்றாலும், அதனை தற்போது கூறினால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பாதிக்கப்படும் என்பதால் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

தாவா சொத்திற்கு மேற்குபுறம் 1 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தோப்பு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தெற்குபுறம் மாரியம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய தாவாவில் மாரியம்மன் கோவில் அடுத்து தெற்குபுறத்தில் சுமார் 80-90 அடி தொலைவில் பொது வழி அமைந்துள்ளது என்று சொல்லியுள்ளபோது அந்த வழியாகதான் 1 ஆம் பிரதிவாதி அவருடைய தோப்பிற்கு சென்றுவர முடியும் என்றால் சரிதான். என்னுடைய தாவாவில் தாவா சொத்துக்கு பிரதிவாதிகள் 3 ஆம் நபர்கள் என்று சொல்லியுள்ளது தவறு என்றாலும், தாவா சொத்து பிரதிவாதிகளின் மூதாதையருக்கு பாத்தியப்பட்டது

என்றாலும் சரியல்ல, தாவா சொத்து என்னுடைய தகப்பனார் அனுபவத்தில் இருந்து பின்னிட்டு அவர் உயில் மூலம் எனக்கு அளித்த சொத்தாகும்.

தாவா சொத்து 1 ஆம் பிரதிவாதிக்கு அவரது மூதாதையருக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், அவர்களிடம் இருந்து நானோ அல்லது என்னுடைய தகப்பனாரோ எந்த கிரையமும் பெறவில்லை என்றாலும் சரியல்ல, 1 ஆம் பிரதிவாதியின் மூதாதையருக்கு என்னுடைய பெரியப்பாவிற்கு வாய்மொழி பாத்தியமாக ஒதுக்கி பின்னர் என்னுடைய பெரியப்பா என்னுடைய தகப்பனாருக்கு வாய்மொழி பாத்தியமாக ஒதுக்கிய சொத்தாகும். தாவா சொத்தில் 1 பகுதி வீடு உள்ளது என்றும் ஒரு பகுதி காலியிடமாக உள்ளதாக குறிப்பிட்டு தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளபோது அதற்கு ஆதரவாக கதவு எண் குறிப்பிட்டோ அல்லது வீட்டு வரி ரசீதோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

நான் தாக்கல் செய்துள்ள கந்தாய ரசீதுகள் மற்றும் வீட்டு வரி ரசீதுகளுக்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல, நான் தாக்கல் செய்துள்ள கந்தாய ரசீதில் பட்டா எண் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்துள்ளேன். என்னுடைய தாவாவில் தாவா சொத்திற்கும் கோவிலுக்கும் இடையில் எவ்வித வண்டி வழிப்பாதையோ, நடைப்பாதையோ இல்லை என்று குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

என்னுடைய தாவாவில் 1 ஆம் பிரதிவாதி அவருடைய நிலத்திற்கு சென்று வர தாவா சொத்தை விலைக்கு கேட்டார் என்று சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. என்னுடைய நிலத்திற்கும் கோவில் நிலத்திற்கும் இடையே பாதை இல்லை என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளபோது கோவில் நிலத்தில் பாதை இருக்கும் பட்சத்தில் அதில் பிரதிவாதிகள் சென்று வர எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரியல்ல, அங்கு பாதை எதுவும் இல்லை. தாவா சொத்தில் உள்ள ஜெக்குபந்திகள் பொறுத்து நிறுபிக்கவேண்டி நீதிமன்ற ஆணையர் யாரையும் நியமிக்க வேண்டி நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

நீதிமன்ற ஆணையர் நிலத்தினை அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்யும் பட்சத்தில் உண்மை நிலவரம் தெரியவரும் என்பதால் தான் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மாரியம்மன் கோவிலை சுற்றி உள்ள இடத்தில் பொதுமக்கள் தற்போதும் பொங்கல் வைத்து விழாக்கள் நடத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல, கோவிலுக்கு முன் பக்கத்தில் மட்டும் இடம்

உள்ளது அங்கு பொங்கல் வைப்பார்கள். கோவிலுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் கோவில் அமைந்துள்ள இடம் போக வடக்கிலும், தெற்கிலும் இடம் உள்ளதா என்றால் இடம் இல்லை. தாவா சொத்திற்கும் கோவிலுக்கும் இடையில் எவ்வளவு அடி தூரம் உள்ளது என்றால் என்னுடைய இடத்தை விட்டு அதற்கு அடுத்து RCC சிமெண்ட் ரோடு உள்ளது அதன் அகலம் எனக்கு சரியாக தெரியாது. கோவிலுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் கோவில் அமைந்துள்ள இடம் போக தெற்கில் எவ்வளவு இடம் உள்ளது என்றால் கோவிலை சுற்றி 4 புறமும் RCC சிமெண்ட் ரோடு உள்ளது அதன் அகலம் எனக்கு சரியாக தெரியாது.

என்னிடம் 1 ஆம் பிரதிவாதிகள் அவர்களுடைய நிலத்திற்கு சென்று வர வழிப்பாத்தியம் கேட்ட வேண்டிய அவசியம் எக்காலத்திலும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை சுற்றி அமைந்துள்ள நிலம் எல்லாம் 1 ஆம் பிரதிவாதியின் மூதாதையருக்கு பாத்தியப்பட்டது என்றாலும் அவர்களிடம் நான் தான் வழிப்பாதை கேட்டு, அதனை மறுத்த பட்சத்தில் பொய்யாக ஒரு தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய தாவாவில் அ.வா. எண்.78/2008 என்ற வழக்கு தொடர்ந்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளபோது அது இவ்வழக்கின் பிரதிவாதிக்கோ அல்லது அவரது ஆட்களுக்கோ எதிராக தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான், அந்த வழக்கு என்மீதும் என் சகோதரர்கள் மற்றும் என் தகப்பனாருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி சங்கதிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல, மேற்படி வழக்கின் தாவா சொத்தும் இந்த வழக்கின் தாவா சொத்தும் ஒன்றுதான்.

என் அப்பாவிற்கு சட்டப்படி பாத்தியமில்லாத சொத்தை பொறுத்து அவர் உயில் எழுதிவைக்க தகுதியற்றவர் என்றால் சரியல்ல. சட்டப்படி இல்லாத உயில் சாசனத்தின் அடிப்படையில் தாவா தாக்கல் செய்ய எனக்கு எவ்வித தகுதியும் இல்லை என்றால் சரியல்ல. தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரங்கள் தவறு என்றாலும், அது என்னுடைய அனுபவத்தில் இல்லை என்றாலும் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

"Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct."

Sd/-M.Suriyakumar, B.A., LL.B.,
District Munsif Cum Judicial
Magistrate, Pochampalli